
மண்ணில் உதிராத
பூக்கள்
மலீஸ் அமீன்

# மண்ணில் உதிராத

# பூக்கள்

மலீஸ் அமீன்

மண்ணில் உதிராத பூக்கள் (கவிதைகள்) / ஆசிரியர்: மலீஸ் அமீன் (அஹமட் அமீன் மொஹம்மட் மலீஸ்) / ©ஆசிரியர் / முதற்பதிவு: 2021 ஒக்டோபர் / வெளியீடு: பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம், மருதமுனை / அட்டை வடிவமைப்பு : மு.ந. சதீல் முஹம்மட் / தட்டச்சு : பி. கோபிநாத் / தளக்கோலம் : மு.ந. சதீல் முஹம்மட் / அச்சுப்பதிப்பு: மெரி செலக்ஷன்,மருதமுனை / பக்கங்கள் : 60 / விலை : 300.00

ISBN : 978-624-98342-0-0

Mannil Uithiratha Pookal ( Poems) Author : Malees Ameen ( Ahamed Ameen Mohamed Malees)/©Author / First Edition : 2021 October / Published by : Baithul Help Nanparkal Vaddam , Maruthamunai / Cover Page: M.N.Satheel Mohamed / Typing :P. kopinath / Page Layout : M.N.Satheel Mohamed / Printing by : Merry Selection, Maruthamunai / Pages : 60 / Price : 300. 00 / ISBN : 978-624-98342-0-0

**மண்ணில் உதிராத பூக்கள்**

**மலீஸ் அமீன் (1984)**

இலங்கை எனும் அழகான தீவிலே, மருதமுனை கிராமத்திலே பிறந்தவர். இவர் ஒரு டிப்ளோமா உளவியலாளர் இவரது தந்தை காலஞ் சென்ற ஐ. எ. அமீன் (BA) (DO) ஒரு சமூக சிந்தனையாளர். அவர் பல சமூக சேவைகளை இன, மத பேதமின்றி செய்து வந்துள்ளார். அவரின் அந்த பாசறையில் கீழ் வளர்க்கப்பட்ட இவர் சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்தி சமூக சேவைகள் பல செய்து வருகின்றார். 2004 ஆண்டு காலப்பகுதியில் தினச்சுடர் பத்திரிகையின் சிறந்த திட்டமிடல் விருதினையும் பெற்றுள்ளார். தற்போது எமது ஊரின் சமூக சேவை அமைப்பான பைத்துல் ஹெல்ப் ஒஹநேஷன் (பே்ா) றிலீப் என்ற அமைப்பில் ஒருங்கிணைப்பாளராக இருந்து பல சமூக சேவைகளை செய்து வருகின்றார். சஞ்சிகைகள், முகநூல் போன்றவற்றில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. இது மலீஸ் அமீனின் முதல் கவிதை தொகுப்பாகும்.

454, ஸம் ஸம் வீதி
மருதமுனை - 03, (32314)
இலங்கை.

தொலை பேசி : - +94772788950
வாட்ஸ் ஆப் :- +94772788950
முகநூல் :- Malees Ameen

**காலஞ் சென்ற என் தந்தை :**

**ஐ.ஏ.அமீன் ( BA) (DO)**

**தாய் :**

**யாசீன் பாவா ஆயிஷாறாவ்**

**இருவருக்கும்**

**சமர்ப்பணம்**

# நன்றி

டி.எம்.முபாரிஸ்/வை.சுகுணதாஸ்/எம்.எஸ்.செளமி எ.எல்.றியலாஸ்/ நஜிமுத்தின்.எம்.ஹஸான்/ அப்துல் மஜீட் ஜெசிம்/எஸ்.எம்.ஆர்.அமினுத்தீன்/எ.எம்.எம். தாலிப்/ எம்.எம்.விஜிலி/எம்.ஐ.எம்.சியாப்/எம்.ஐ.எம். அனஸ்/ எஸ்.எம்.தொகுத்தார்/ஏ.ஏ.எம்.மபாஸ்/ எஸ்.எம்.றஊப்டீன்/பி.கோபிநாத்/எம்.எச்.றைசுல் ஹக்கீம்/ எம்.சீ.எம்.அஸ்வர்/ஏ.எம்.முனாஸ்/ ஏ.ஏ.எம்.மஹீஸ்/க.பிரபு/ எம்.பி.அபுல்ஹசன்/ஏ.ஏ.எம்.மஜாஸ்/எம்.ஐ.எம்.சுஹைர்/ எஸ்.எச்.எம்.வர்ஷாத்/எஸ்.எம்.சாதிர்/ எம்.எச்.ஏ.கரீம்

## வரிகளின் கவித்துவம் உரசும் கவிதைகள்

கவிஞர் மலீஸ் அமீனின் மண்ணில் உதிராத பூக்கள் கவிதைகளின் மூலப் பிரதியை வாசித்துக் கொண்டிருக்கும் போது எனக்குள் பல வினாக்கள் அண்மித்துக் கொண்டிருந்தன தான் சொல்ல வரும் விடய அம்சத்தை இறுதி வரைக்கும் அலட்டிக் கொள்ளாத கவிநயங்களை உரசும் வினோதம் இரசனைப்படுகிறது.

அம்பாறை மாவட்டம், மருதமுனை மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கவிஞர் மலீஸ் அமீன். இவருடைய இக்கவிதைகளை வாசிப்பு பிரதியாக முன் நகர்த்தும் போது பரந்த ஆழ் வாசிப்பினை இக்கவிதைகள் முன்னிறுத்துகின்றன.

ஆர்ப்பாட்டமில்லாத மொழி, இலகு நடை, தலைப்புக்களுக்கேற்ப கவிதா உத்தி, என்ற கவிதை இருப்பு மூலம் வாசகர்களை ஈர்க்கும் திறன் இவரிடம் நிறையவே குடிகொள்கிறது.

அவ்வப்போது புன்னகைத்து கடந்து போகும் இவரிடம் இக் கனதியான எழுத்துக்களில் வாழ்வியலை செதுக்கியிருப்பது இன்னும் இவர் கவிதைகள் மீதான கரிசனையை ஏற்படுத்தி இருக்கிறது.

நவீனமான சொல்லாடல் இக்கவிதைகளை உயிரோட்டம் பெற வலுச் சேர்க்கிறது. இயற்கை / காதல் / வாழ்வியல் / ஏழைகளின் வர்க்கத் துயர் / இவ்வாறான பாடுபொருட்களை இணைத்து கவிதைகள் பின்னப்பட்டுள்ளன.

அஃறிணைக் குறியீடுகளை அழகு நயம் பெற சில கவிதைகளை இவர் பேனாவுக்குள் சிறைப்படுத்தியிருப்பது வாசிப்பு தளத்தை உச்சமடையச் செய்கிறது.

கவிஞர் மலீஸ் அமீன் நீண்டு செல்லும் தலைமுறை இடைவெளியில் புதிய பார்வையும் பாய்ச்சலும் இவருக்கானது. இன்னும் பல கவிதை தொகுப்புக்களை நம்மிடையே இவர் சமர்ப்பிக்க வேண்டும் என்ற வாழ்த்துக்களோடு குறிப்பிலிருந்து விடைபெறுகின்றேன்.

எம். எம். விஜிலி
செயலாளர்
தமிழ் மொழி மூல புத்தக வெளியீட்டாளர் பேரவை
அம்பாறை மாவட்டம்.
(09.08.2021)

# என் சிந்தனை கவிதைகள் பற்றி

மனித சிந்தனை என்பதே கவிதை வடிவமானது. கவிதைகளுக்கு எப்போதும் உள்ளோடும் உயிரோட்டம் உண்டு. இயற்கையை இரசிக்கும் போதே அந்த சிந்தனை கவிதையாக சொல் எழுத்து உருவாக்கம் அடைந்து கவிதை எழுதும் பண்பாட்டில் உருவெடுக்கிறது.

சிந்தனையும், அனுபவமும் இயற்கையோடு ஒன்றினையும் போது கவிதைகள் உருவாகின்றன. என்பது எனது மனதில் தோன்றிய ஒன்று எனலாம்.

மனித வாழ்க்கை பல்வேறு வகையான அனுபவங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அது கவிதை மூலமாகவும் உணரப்படுகிறது கவிதை தனியவரின் அனைத்து பருவங்களிலும் ஆராய்கிறது எனவும் சிந்தனை கவிதையின் கருப்பொருள் எண்ணற்ற முக்கிய பரப்புக்களாகவும், துணைப்பரப்புக்களாகவும் விரிவடைந்து இருக்கிறது கவிதை எழுதும் தன்மை மனிதனின் பண்புகளின் வளர்ச்சிக்கு உதவியாக அமைகின்றது என கூறலாம்.

சிறு வயதில் இருந்தே கவிதை எழுதும் ஆற்றலை எனக்கு இயற்கை தந்த அருட்கொடையாகவே நான் கருதுகின்றேன். கால ஓட்டத்தில் கவிதை எழுதும் ஆற்றலிருந்தும் அதனை அளவிட முடியவில்லை.

இருந்த போதிலும் நவீன உலகத்தின் வளர்ச்சி முகநூல் அறிமுகமாகிய போது அதில் எனது கவிதைகளை பதிவேற்றம் செய்ததன் மூலம் முகநூல் நண்பர்களின் அறிமுகம் உலகம் முழுவதிலிருந்தும் கிடைத்தன.

இதுவே என்னையும் கவிதைகள் எழுதுவதற்கு தூண்டியது எனலாம். நான் எனது முகநூலில் எழுதப்பட்டவையும், வெளிவராதவைகளும் சேர்த்து இங்கு ஒரு தொகுதியாக வெளியிட்டு இருக்கின்றேன்.

எனது இந்த முதல் கவிதை தொகுதியின் நேர், மறை கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றேன் வரவேற்கின்றேன்.

**அன்புடன்**
**மலீஸ் அமீன்**

## உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | வார்த்தைகள் | 12 |
| 02. | சுயநலம் | 13 |
| 03. | இறைவன் கவிதை | 14 |
| 04. | பேனாவின் கரங்கள் என்னவள் | 15 |
| 05. | சுனாமியில் என் கவிதை | 16 |
| 06. | தென்றல் மோதிய பூக்கள் | 17 |
| 07. | கவிழ்ந்த படகு | 18 |
| 08. | என் இனியவளே | 19 |
| 09. | அன்பு என்றால் அன்னை தெரேசா | 20 |
| 10. | விட்டுக் கொடுப்பு | 21 |
| 11. | சிறந்த கண்ணீர் | 22 |
| 12. | என் தாய் எனும் கவிதை | 23 |
| 13. | காலத்தின் மனசு | 24 |
| 14. | நண்பனின் மரணம் | 25 |
| 15. | பேருந்து பயணம் | 26 |
| 16. | தனிமையில் நான் | 27 |
| 17. | ஒரு முத்தம் | 28 |
| 18. | பிரிவு விழா | 29 |
| 19. | இனியும் இயல்பானவன் | 30 |
| 20. | விவசாயி அழுகுரல் | 31 |
| 21. | எது நடனம் | 32 |
| 22. | மழை எனும் வெயில் | 33 |
| 23. | பிறப்பு | 34 |
| 24. | இறந்த இளமை | 35 |
| 25. | என் அன்பான மனைவி அவள் | 36 |

26. ஊமைக் காதல் 37
27. மகிழ்ச்சியின் பாதை 38
28. யார் திருடர்கள் 39
29. வெளிநாட்டு கணவன் 40
30. இயற்கையோடு 41
31. வலியோடு 42
32. கொரோனா பிடியில் 43
33. ஞாபகங்கள் 44
34. எது அழகு 45
35. ஏழையின் பசி 46
36. பூமியின் கண்ணீர் 47
37. ஒரு அம்மாவின் கடைசி ஆசை 48
38. விடை தேடிய வாழ்க்கை 49
39. மனம் போல் 50
40. அவளிடம் தேடிய காதல் 51
41. குடை பிடித்த காதல் 52
42. எனக்காக என்னவளின் வரிகள் 53
43. மனதின் தாலாட்டு 54
44. காலத்தின் விண்ணப்பம் 55
45. தூரத்து மலை 56
46. என் தந்தையின் மரணம் 57
47. உயிர் உறையும் நதியாக 58
48. இதயத்தின் வேதனை 59
49. அமைதி 60

# வார்த்தைகள்

தொலைந்த வார்த்தைகளை
அகழ்ந்து கொண்டிருக்கின்றேன்
ஓர் கவிதைக்காக
நீள் மௌனம்
புதைந்து கொஞ்சம் பேசுகிறேன்
என்னுள் இருக்கும் கடவுளிடம்
தென்றலைப் பற்றி எழுதி வைத்த
காகிதம் போகிறது புயலுடன்.

# சுயநலம்

இருட்டு என்பது
இரவுகளுக்கு மட்டும் அல்ல
சில மனிதர்களுக்கும் உண்டு
சுய நலமாக வெற்றி கொள்ளும்
எவரும்
வெளிச்சமாக
நடமாட
முடியாது போகலாம்.

# இறைவன் கவிதை

பாவங்கள் செய்து
பலனடைந்து
பாவ மன்னிப்பையும்
பரிகாரங்களையும் செய்து தப்பிக்க
மனிதர்கள் பழகிவிட்ட உலகில்
கொடுப்பதற்கு
வரங்களுடன்
யாரேனும் தவமிருப்பார்களா
என காத்திருக்கிறார் இறைவன்

# பேனாவின் கரங்கள் என்னவள்

கிறுக்கிய கோடுகள்
எல்லாம் ஓவியம் ஆகிறது
என் பேனாவின்
கரங்கள் விதைத்த விதை
எல்லாம்
கவிதை ஆகிறது
ஆனால், என் வீட்டுக்
கண்ணாடி மட்டும் - நான்
பார்க்கும் போதெல்லாம்
உன் முகம் காட்டுகின்றது
என்னவளே.

## சுனாமியில் என் கவிதை

சுனாமி புரட்டிப் போட்ட
மணல் வெளியில்
இன்னும் வலியுடன்
தேடிக் கொண்டிருக்கின்றேன்
எனது கவிதை
வடுக்களை.

## தென்றல் மோதிய பு□க்கள்

தென்றல் மோதிய பூக்களுக்கு
வலிப்பதில்லை
ஆனால்
தென்றல் போல்
உன் நினைவுகள் மோதி
என் உள்ளம் வலிக்கிறது.

# கவிழ்ந்த படகு

மீனவன் வந்த படகு
கவிழ்ந்தது கரையில்
கடல் அள்ளிச் சென்றது
அவன் பிடித்த
மீன்கள் மட்டுமல்ல
அவனின் வீட்டில்
உள்ள குழந்தைகளின்
வற்றிய வயிறும்தான்.

# என் இனியவளே

துன்பங்கள் கரைக்கும்
கவிதை முகமே
கண்கள் விரும்பும்
கவிதை சுகமே
நெஞ்சம் கொஞ்சும்
புன்னகை வனமே
இன்பம் ததும்பும்
இன்னிசை குளமே
என்றும் என்
இனியவளே.

# அன்பு என்றால் அன்னை தெரேசா

பூமி பந்தில் புனிதம் தேடினேன்
உன் உருவம் தெரிந்தது
அன்பின் வடிவம் அகத்தில் கண்டால்
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் கண்டால்
உன் கண்களின் ஒளியால்
நிலவும் கூட நிகரில்லாதது
உன் சேவை சிறகில்
சுமைகள் எல்லாம் சுகங்கள் ஆனது
உன்னை உள்ளம்
வாழ்த்துதே
உன்னை உள்ளம்
வணங்குதே.

# விட்டுக் கொடுப்பு

நிஜத்தின் வலியில்
கற்பனை எல்லாம்
இறந்து போனது
விட்டுக் கொடுப்பதன்
வலி
பெற்றுக் கொள்பவர்களுக்கு
தெரியவே தெரியாது.

# சிறந்த கண்ணீர்

நீ காணாமல் போனாய்
உன்னை காணாமல்
கண்கள் உடைந்ததே
கவலை தீராமல்
மழையிடம் கடன் வாங்கி
அழுகின்றதே
மௌனம் வாழும் இடத்தில்
வார்த்தைகள் தேவையில்லை
வலியை மொழி பெயர்க்க
கண்ணீரிலும்
சிறந்தது இல்லை.

# என் தாய் எனும் கவிதை

தேடிப் பார்த்தேன்
இன்னும் கிடைக்கவில்லை
அவளை விட ஒரு அழகான கவிதை
என் தாய்
என்னை அரவணைத்தலில்
மெல்லிய கவிதை
பாசம் காட்டுவதில்
அன்புக் கவிதை
உற்சாகப்படுத்துவதில்
உணர்ச்சிக் கவிதை
என்னை தைரியப்படுத்துவதில்
வீரக்கவிதை
அவளை மிஞ்சிட இந்த உலகில்
இன்னும்
யாரும் பிறக்கவில்லை
காரணம்
என் தாயே கவிதை.

# காலத்தின் மனசு

காலம் காண்பிக்காத
மனசு
எல்லா கண்களின் சாட்சியில்
தெரியும் நிழல்களில்
திருப்தி கொள்கிறது
பேரழகியால் தெரியாமல்
போன கனவுகளால்
கவிதை பிறந்தது
தேவதையாய் நினைத்தால்
தினம் தினம் ஒரு கனவாய்
தோன்றி கவிதையாய் பூத்தாள்
புது மலராய்.

# நண்பனின் மரணம்

கசிவு கொண்ட
கண்ணீரை
இன்றுதான் கணக்கிட
முடிந்தது
நாடி நரம்பு
விறைத்து அடங்கிப் போயின
உனது மரண செய்தி
கேட்டு
இனி எங்கு காண்போம்
உன் முகத்தை.

# பேருந்து பயணம்

வாழ்க்கை

முன்னோக்கி

செல்ல

நினைவுகள்

பின் நோக்கிச்

செல்கிறது

எனது

பேருந்து

பயணத்தில்

# தனிமையில் நான்

தனிமையில் நிற்கின்றேன் நான்
கடந்து செல்வோர் பலர்
காரணம் கேட்டு நகர்கின்றனர்
துரோகம் எனும் வெயிலும்
ஏமாற்ற மழையும் - என் உயிரை
எரித்து நனைத்தாலும்
கண்ணீர்த் துளிகளை
இமைகளுக்கிடையில் இறுக்கி
பதுக்கிக் கொள்கின்றேன்

காலங்கள் கடந்து சென்றாலும்
என் கால்கள் கடக்க
வழி தெரியவில்லை

மனம் கணக்கும் - உன்
நினைவுப் பொதியுடன்
தனிமையில் நிற்கின்றேன்
நான்
நீ விட்டுச் சென்ற அதே இடத்தில்.

## ஒரு முத்தம்

தென்றல் என்னை
ஒரு முத்தத்தோடு
சந்திக்கும் வரை
இருள் முழுவதும்
கவிதை எழுதுவேன்
உன்னை நினைத்து.

# பிரிவு விழா

ஓடாத கடலே உனக்கு
பல கோடி வாழ்த்துக்கள்
மலரும் நினைவுகள்
மனதில் இனி நிரந்தரம்
நினைவுகள் வந்தால்
கணத்துப் போகும் இதயம்
தேர்வுக் காலம் நோக்கி
தயாரானோம்
வெற்றி வாகை சூடிவந்த பின்னே
தோற்றுப் போவோம்
அதுதான் பிரிவு
தேர்வுக்கு முன்னே தயாரானோம்
பிரிவு விழாவிற்கு
சிரித்துப் பேசிய நாட்கள்
இனி நகர்ந்து மறையும்
சில நாட்களில்
திகைத்துப் போனோம்
இப்படியும் ஓர்
வாழ்வா என்று.

# இனியும் இயல்பானவன்

கெட்டவன் என்று
எண்ணாதே
இன்னொரு முகம்
இல்லை எனக்கு
சிரிப்பை காட்டி
இனியும் இயல்பானவன் - என்று
எண்ணுகிறாய்
அகன்ற உன் இதயத்தை
இனியாவது அசுத்தப்படுத்தாதே
இல்லையேல் - நீ
வெளியாவாய்
உன் செயல்கள் அழகாகட்டும்.

## விவசாயி அழுகுரல்

மனிதா

மேகங்களை கயிறு

கட்டி இழு

ஒரு தடவை

சத்த மழைக்காக

அல்ல

செத்த விவசாயிக்காக.

# எது நடனம்

உலகின் மிகச் சிறந்த
நடனம் எதுவென்று
கேட்டால்
அது நளினம் காட்டி
எரியும் தீயின்
வெளிச்சம் நோக்கி
கை நீட்டுவேன்.

## மழை எனும் வெயில்

நான் என்பது வெயிலாக
நீ என்பது மழையாக
மழையோடு வெயில்
சேரும்
அந்த காலநிலை சுகமாகும்.

## பிறப்பு

பிறப்பின் நொடிகள்
மிகவும் அழகானது
இயற்கையின் நகர்வால்
அடையும் போது
மிகவும் அழகாகிறது.

# இறந்த இளமை

இது வரை எழுதப்படாத
எழுத்துக்களில் தொலைகின்றேன்
நான்
சில தோல்விகளை சந்தித்த பின்
வெற்றியை தேடினேன்
தோல்வி சிரித்தது
பல வறுமைக்கு பின்
பணத்தை தேடினேன்
விதி உதைத்தது
காதல் தோல்விக்குப் பின்
காதலை தேடினேன்
ஞாபகங்கள் எரித்தது
பல துரோகத்திற்கு பின்
நம்பிக்கையை சந்தித்தேன்
துரோகம் முறைத்தது
இவை அனைத்தும்
போராடி வெல்லும் போது
இளமை இறந்தது.

# என் அன்பான மனைவி அவள்

புன்னகையின் முகவரியும் - நீ
முற்றத்தை ஆளும் முதலாளியும் - நீ
பெண்மையின் மென்மையும் - நீ
கன்னியர்களின் கருங் கூந்தலும் - நீ
மாங்கல்யத்திலும் - நீ
மரணத் துயிலிலும் - நீ
சாந்தியின் சின்னமும் - நீ
என் அன்பான மனைவி அவள்.

## ஊமைக் காதல்

திசை தெரியாத ஒரு
பயணத்தில்
உன்னை சந்தித்த நாட்கள்
என் வாழ்க்கையில்
ஒய்வெடுத்த நாட்கள்
சிந்தித்து பார்க்கும் முன்
உணர்வுகள் முந்திக் கொண்டது
நேற்றைய பொழுது
இதயத்தில் நிறுத்திய உன்
உருவம்
இன்றைய பொழுதில்
மனதுக்குள் மலர்ந்த காதல்
இன்னும் ஊமையாய்.

# மகிழ்ச்சியின் பாதை

மகிழ்ச்சியின்
பாதை எங்கு
தேடினாலும் கண்டு பிடிக்க
முடியாது
காரணம் மகிழ்ச்சி என்பதே
பாதை தான்.

# யார் திருடர்கள்

பிடித்தார்கள், அடித்தார்கள்
உழைத்து வாழ் என்றார்கள்
பணப்பை கிடைத்துவிட்டது
இலஞ்சமாக பெற்ற பணம்
அப்படியே இருந்தது
யார் திருடர்கள்.

# வெளிநாட்டு கணவன்

கனவா எல்லாம் கனவா
நான் தாகத்தில் நிற்கிறேன்
நீ கிணறு வெட்டுகிறாய்
நான் சோகத்தில் நிற்கிறேன்
நீ காதலை சொல்கிறாய்
நியாயமா
மூன்று ஆண்டுகள்
தனிமையில் நான்.

# இயற்கையோடு

இயற்கை கவிதை
கிராமத்து இரசனை
ஓடும் மேகத்தை
பார்த்துக் கொண்டே
ஆடும் மரங்களை
இரசித்துக் கொண்டே
வீசும் காற்றை உணர்ந்து
கொண்டே
பாடும் குருவிகளின்
இசையை கேட்டுக்
கொண்டே
அமைதியான கிராமத்தில்
புவித்தாய் மடியில்.

# வலியோடு

என் உயிரை உருக்கி
நான் எழுதும் கவிதைகள்
என் கண்களில்
நீரையும், என் மனதையும்
கலங்க வைத்தாலும்
கவிதைகள் உலக
வலம் வருகிறது
உலகறிய செய்த இரசிகனே
நான் உன்னை
எழுந்து நின்று
தலை வணங்குகிறேன்.

# கொரோனா பிடியில்

கொரோனாவின்
ஆட்டத்தில்
உன் உயிரும் வீழலாம்
எதிர்த்து நிற்காது
ஒதுங்கி நின்று போராடு
வரும் முன் காத்திடு
வந்தபின் கண்ணீர் சிந்தாதே
விரைந்து நீயும்
விரட்டி வா

## ஞாபகங்கள்

என் ஞாபகங்களை
கழற்றி எறிந்து விட்டு
வாழ்க்கை பாதையில்
நீ நடக்க முடியாது
நீ கவனித்துக் கொள்
அவை உன்னுடைய
கால் செருப்புக்கள் அல்ல
எனது கால்கள்.

## எது அழகு

மழை மட்டுமா அழகு
சுடும் வெயில் கூட
அழகு
மரம் மட்டுமா அழகு
விழும் இலை கூட
அழகு
வெற்றி மட்டுமா அழகு
தோல்வி கூட அழகு
வாழ்க்கை மட்டுமா அழகு
மரணம் கூட.

# ஏழையின் பசி

பசித்தவனுக்கும், கைநீட்டி
கேட்டவனுக்கும்
கொடுக்காது பணம்
பசிக்காத இறைவனுக்கு
ரூபாய் நோட்டில்
காணிக்கை செய்யும் சமுதாயம் இது.

# பூமியின் கண்ணீர்

எத்தனை கோடி
கண்ணீர்த் துளிகள்
மண் மீது வீழ்ந்திருக்கும்
அத்தனை கண்ணீர்த்
துளிகளையும்
தாங்கிக் கொண்டு
பூமி எப்படி பூக்களை
பூக்கும்
முகமூடி அணிகின்ற உலகிலே
உன் முகம் என்று
வந்தது என்னது.

## ஒரு அம்மாவின் கடைசி ஆசை

என் கல்லறையின் மேல்

உன் பெயரை எழுதிவை

நினைப்பதற்கு அல்ல

அங்கும் நான் உன்னை

சுமப்பதற்கு

மகனே

மகளே.

# விடை தேடிய வாழ்க்கை

விடையற்ற கேள்விகளை

போல

எழுதப்பட்ட

இந்த வாழ்க்கையின்

விடை தேடியே

அலைகின்றேன்

நான்.

# மனம் போல்

பாதையின் வலி
கண்ட இதயத்துடன்
விழி கொண்ட
கண்ணீருமாய்
முடிகிறது வரி
மனம் போல்
வாழ்க்கை என்று.

# அவளிடம் தேடிய காதல்

ஆசை
என்னை எந்த திசையும்
உன் முகம் காட்டியது
காதல்
என்னில் என்னை மறந்து
உன்னை நினைக்க தூண்டியது
தேடல்
உன்மேல் காமம் கொள்ளவும்
காதல் மிகவும் பார்த்தது
போதை
எங்கும், எதிலும் இன்றி உன்
இதழ் முகத்தில் தீர்ந்தது
இன்பம்
நான் உன்னை நினைக்கையில்
என் இதயம் நிறைந்தது
அன்பு
உந்தன் அரவணைப்பில்
என் ஆயுள் கடந்தும்
தொடர்வது.

# குடை பிடித்த காதல்

எழுத்தை கவிதையாக்கி
கவிதையை காவியமாக்கி
காவியத்தை காதலாக்கி
காதலை கடிதமாக்கி
அனுப்பினேன்
நீ நனைந்திடாத
குடைபிடித்த என்
காதலுக்காக.

# எனக்காக என்னவளின் வரிகள்

காலத்தின் பாதையில்
இறந்து போன உணர்வுகளில்
புதிதாய் பூத்தவள்
விழிகள் பற்றி
மீண்டும் மீண்டும் என்
இதயம் துடிக்கிறது
அந்த விழிகளின் பார்வைக்காக
பாலை வனத்தில்
பயணிக்கும் என் பாதமும்
உன் நினைவை சுவாசமாய்
சுமக்கிறது
உன்னை விழிகள் சந்தித்த
நாள் முதலாய்.

# மனதின் தாலாட்டு

மனதுக்குள் இதமான
தாலாட்டாக அவள்
நினைவுகள்
தூங்கும் போது
மட்டும் கனவில்
அவள் நகம் இல்லாத
விரல்கள்
என் இதயத்தை தடவுகின்றன
நானும் அவளை
பல முறை தொட்டு
இருக்கின்றேன்
என் கற்பனை கவி வரிகளில்
காதலைச் சொல்லாமல்
அவளை தீண்டாமல்
அவளைப் பற்றி கனவுகளோடு
நிஜமாக வாழ்கின்றேன்.

# காலத்தின் விண்ணப்பம்

பனி படர்ந்த பாதையிலே
பயணமேது
வாடிவிட்ட மலரிலே
அழகேது
பழகிவிட்ட அன்பிலே
பிரிவேது
சுமைகளும், சோகங்களும்
சுகமாக
சாபங்கள் தான் வதைக்கிறது
தடை போட்டிருக்கும்
இம் மைல் கல்லை
தாண்டி வெற்றி நடை போட.

# தூரத்து மலை

நல்லதும், கெட்டதும்
அழகாகவே கழிகிறது
வாழும் நாட்களின்
நகர்வுகளில்
கண் முன் இருக்கும்
உலகில் காண்பது
என்னவோ மனதில்
உள்ளதுவே
வாழ்க்கை ஒன்றும்
தூரத்து மலைகள் உள்ள
பூக்களில் இல்லை
அருகே இருக்கும்
உண்மைகளின் நரம்பில்
கரைந்திருக்கிறது.

# என் தந்தையின் மரணம்

இல்லை நீயும் எனும் போது
வாழ்வே எதற்கு
எதை நான் கேட்டாலும்
வாங்கி தருவாய் நீ எனக்கு
துயர் நான் இதை கேட்காமல்
கொடுத்தாயே எதற்கு
அழுதிட கூடாது என்று
அறிவுரை கூறுவாயே
மற்றவரை அழ வைத்திடாமல்
பல சேவை செய்தாயே
அழுகையை நீயே
தந்து போனாயே
நடந்திட பாதம் தந்து
வாழ்க்கையின்
வழியினை காட்டும்
வயதில்
நடுவினில் முந்திச் சென்றாய்
நிரந்தர துக்கம் தந்து சென்றாய்
இறுதியில் நீயே
இல்லை
என் தந்தையே.

# உயிர் உறையும் நதியாக

காட்சிகள் ஏதும்
தேவையில்லை
சர்ப்பத்திற்கு எதற்கு
வாசனை உதடுகள்
உறையும் பனிக்கடல்
நான் உருகி
ஓடி வந்து
என்னோடு
சேர்ந்தது
நதியாக.

# இதயத்தின் வேதனை

நான் இறந்தும்
உலகில்
சுற்றுகின்றேன்
இறைவன் எடுத்துச் சென்ற
அந்த ஒரு
இதயம் எப்படி
வாழுமென்ற
வேதனையில்
என் பூமியின் சொர்க்கத்தை
அதன் மூலம் அவனுக்கு
அழித்தான்.

## அமைதி

கடலில் விழுந்த
மழை துளியை
தேடுவது போல்
தேடுகின்றேன்
என் உள்ளத்தின்
வழியே
அமைதி என்னும்
சுவாசத்தை.



முதல் வாசிப்பிலேயே உயிரோட்டம் செய்கின்றது கவிஞர் மலீஸ் அமீனின் மண்ணில் உதிராத பூக்கள் கவிதைகள் இலகுவான மொழி நடையில் இயற்கையின் இரசனையின் உச்சத்திற்கே கொண்டு செல்கின்றது. மறுபுறம் மொழியின் சாத்தியங்களை மட்டும் சார்ந்து நகராமல் எழுத்துக்களில் வாழ்க்கை சித்திரத்தை தெளிவுபடுத்தியிருக்கின்றார். மிகவும் நேர்ப்பட பேசுகின்ற இக் கவிதைகள் தமிழின் புதிய வரப்பிரசாதமாகும்.

**எம்.எச். றைசுல் ஹக்கீம்**
தலைவர்
பைத்துல் ஹொல்ப் ஒஹாநேசன் (போர்) றிலீப்
இலங்கை.

ISBN 978-624-98342-0-0
9 786249 834200
Rs.300/-

**மண்ணில் உதிராத பூக்கள்**

மலீஸ் அமீன் கவிதைகள்

Cover : Kidzmate